| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| ஆணையர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,<br>பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,<br>சென்னை – 600 015. | மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>அனைத்து மாவட்டங்கள்.<br>(சென்னை நீங்கலாக). |

<u>ந.க. எண். 52898/2025/ப.ரா.(நி).3, நாள்: 23.07.2025</u>

அய்யா/அம்மையீர்,

பொருள் : வழிகாட்டுதல் குழு (Steering Committee) – கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சியின் கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் – சொந்த வருவாயை உயர்த்திட "வழிகாட்டுதல் குழு" (Steering Committee) அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது – தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண்.148, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2) துறை, நாள்.16.07.2025.

*****

பார்வையில் காணும் அரசாணையின் படி, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சியின் கடைகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், கொள்கை வழிகாட்டுதல்களை உருவாக்கவும், சொந்த வருவாயை உயர்த்திடவும் கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் "வழிகாட்டுதல் குழு" (Steering Committee) அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | தலைவர் |
| 2. | கூடுதல் ஆட்சியர்/ இணை இயக்குநர் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் |
| 3. | செயற்பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் |
| 4. | செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு) | உறுப்பினர் |
| 5. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | உறுப்பினர் |
| 6. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) | ஒருங்கிணைப்பாளர் |
| 7. | மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 8. | வணிகர் சங்க பிரதிநிதிகள் (இருவர்) (மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படுபவர்கள்) | உறுப்பினர் |

மேற்காணும் வழிகாட்டுதல் குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி விவாதித்து கிராம ஊராட்சிகளின் காலிநிலங்கள், கட்டிடங்கள், கடைகளுக்கான வாடகை/குத்தகை நிர்ணயம் செய்ய வேண்டும். சட்ட ரீதியான வழக்குகளையும் முடிவுக்குக் கொண்டு வர உரிய வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும். மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறு தங்களது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிடவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு– அரசாணை (நிலை)எண்.148,
நாள்.16.07.2025.

ஒம்/–பா.பொன்னையா,
ஆணையர்

ஆணையருக்காக

நகல்

1. கூடுதல் முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தலைமை செயலகம், சென்னை–09.
2. கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/திட்ட இயக்குநர், அனைத்து மாவட்டங்கள்.
3. செயற்பொறியாளர்(ஊரக வளர்ச்சி), அனைத்து மாவட்டங்கள்.
4. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)/ உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), அனைத்து மாவட்டங்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்
22 JUL 2025
* சென்னை-600 015 *

சுருக்கம்

அறிவிப்புகள் 2025 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளில் கடைகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண கொள்கை வழிகாட்டுதல்களை உருவாக்க "வழிகாட்டுதல் குழு" (Steering Committee) அமைத்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2) துறை

அரசாணை (நிலை) எண்.148

52898

நாள்: 16.07.2025
விசுவாவசு வருடம், ஆனி 32,
திருவள்ளுவர் ஆண்டு 2056.

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1025/2025/ ப.ரா(நி)–3, நாள்: 23.06.2025.

********

ஆணை:

மேலே படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.05.2025 அன்று மதுராந்தகத்தில், 42–வது வணிகர் தினத்தையொட்டி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற வணிகர் கோரிக்கை பிரகடன மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மூன்றாவது அறிவிப்பாக கீழ்க்காணும் அறிவிப்பு அறிவிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

*"சென்னை மாநகராட்சி நீங்கலாக, மற்ற மாநகராட்சிகளில் இருக்கின்ற கடைகள், வணிக வளாகங்களின் பிரச்னைகளைத் தீர்க்க, வழிகாட்டு குழுக்கள் 2024–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதேபோல், சென்னை மாநகராட்சி, பேரூராட்சிகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அமைக்கப்படும்."*

2. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைக்கு ஆதாரமாக உள்ளவை சொத்துவரி, குத்தகையினங்களான கடைகள், வணிக நோக்கத்திற்கான இடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் குத்தகை உரிமங்கள் போன்றவையாகும் என்றும், குத்தகையினங்களான கடைகள், வணிக நோக்கங்களுக்கான இடங்கள், பிற

காலியிடங்களை குத்தகை மற்றும் குத்தகை உரிமங்கள் போன்றவற்றை பொது ஏலத்தில் விடும்பொழுது உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகள் இல்லாமல் உள்ளாட்சி மன்றங்களின் விருப்பத்திற்கேற்ப நிபந்தனைகளை விதித்தும் கட்டணங்களை நிர்ணயித்தும் குத்தகை நிபந்தனைகள் ஏற்படுத்தியும் வரும் வழக்கம் நடைமுறையில் உள்ளது என்றும், இதனால் அருகருகே உள்ள கடைகள் / சொத்துகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வதில் அல்லது குத்தகைக்கு விடும் சமயங்களில் பல்வேறு ஏற்றத் தாழ்வுகள் உருவாகின்றன என்றும் இதனால் கிராமப்புற உள்ளாட்சிக்கு முறையாக ஈட்டப்பட வேண்டிய வருவாய் கிடைக்க பெறாததுடன் பல்வேறு தணிக்கை தடைகள் எழுப்பப்பட்டு வருகின்றன என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இது போன்ற இனங்களில் ஏற்றத் தாழ்வுகளின்றி ஒரே மாதிரியான குத்தகைத் தொகை நிர்ணயம் செய்தல், குத்தகைக்கான முன்வைப்புத் தொகை நிர்ணயம் செய்தல், குத்தகை நிபந்தனைகளை உருவாக்குதல் போன்றவற்றிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவரின் கீழ், கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்ட வழிகாட்டுதல் குழுவை (Steering Committee) உருவாக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | தலைவர் |
| 2. | கூடுதல் ஆட்சியர் / இணை இயக்குநர் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. | உறுப்பினர் |
| 3. | செயற் பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. | உறுப்பினர் |
| 4. | செயற் பொறியாளர், பொது பணித்துறை (கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு). | உறுப்பினர் |
| 5. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | உறுப்பினர் |
| 6. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) | ஒருங்கிணைப்பாளர் |
| 7. | மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | உறுப்பினர் |
| 8. | வணிகர் சங்க பிரதிநிதிகள் (இருவர்) (மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படுபவர்கள்) | உறுப்பினர்கள் |

மேற்காணும் வழிகாட்டுதல் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி பின்வரும் பணிகளை மேற்கொள்ளலாம்.

I. கிராம உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் சொத்துவரி உள்ளிட்ட வரி இனங்கள் மற்றும் அனைத்து வருவாய் ஈட்டக்கூடிய வரியில்லா

இனங்கள் குறித்து விவாதித்து தேவைக்கு ஏற்ப வழிகாட்டுதல் நெறிமுறைகளை வகுத்து கிராம உள்ளாட்சிகளில் ஏற்றத்தாழ்வற்ற நியாயமான வருவாயினை ஈட்டுவதற்கு வழிவகை செய்தல்.

II. கிராம உள்ளாட்சிகளில் வருவாய் குறித்து ஏற்படும் முக்கியமான மற்றும் உள்ளூர் மட்டத்தில் தீர்க்க இயலாத பிரச்சனைகள் குறித்து ஆலோசித்து முடிவு செய்தல்.

III. கிராம உள்ளாட்சிகளுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கான குத்தகை இனங்களுக்கு நியாயமான வாடகை மற்றும் இடத்திற்கேற்ற முன் வைப்புத் தொகை நிர்ணயம் செய்ய உதவுதல்.

IV. கிராம உள்ளாட்சிகளுக்கு சொந்தமான வருவாய் ஈட்டும் சொத்துகளை ஏலம் (auction) விடுவது குறித்த வழிமுறைகள் வகுப்பது

V. கிராம உள்ளாட்சிகளின் காலி நிலங்கள், கட்டிடங்கள் முதலானவற்றை முறையாக வருவாய் ஈட்டக்கூடிய விதத்தில் பயன்படுத்திட ஆலோசனை வழங்குதல்.

VI. குத்தகை/வாடகை தொகை மறு நிர்ணயம் செய்தலுக்கு கால இடைவெளி அளவை நிர்ணயம் செய்தல்,

VII. ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்டு வசூலிக்கப்பட்டு வரும் வாடகை வருவாயில் உள்ள குறைகளை சீரமைப்பதற்கும் நிலுவையில் உள்ள வழக்குகளை சட்ட ரீதியாக அணுகி முடிவுக்கு கொண்டு வரவும் உதவுதல்.

VIII. வருடாந்திர குத்தகை இனங்கள் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கான கட்டணங்கள் வாகன நிறுத்துமிடம் மற்றும் கழிவறை வசதிக்கான கட்டணங்கள் முதலானவற்றை மாற்றியமைத்தல் மற்றும் அதற்கான குத்தகை விதிகளை உருவாக்குதல் போன்றவற்றிற்கான ஆலோசனைகள் வழங்குதல்

IX. வரியினங்கள் குறித்தான வழிகாட்டுதல் வழங்குதல்.

X. ஆவின், கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை போன்ற பொது நிறுவனங்களுக்காக வழங்கப்படும் நிலங்கள்/ கட்டிடங்களுக்கான வாடகை நிர்ணயம் செய்தல் குறித்தான வழிகாட்டுதல் வழங்குதல்.

4. மேற்கண்ட உறுப்பினர்களுடன் வழிகாட்டுதல் குழுவினை (Steering Committee) அமைக்க பரிசீலனை செய்து உரிய அரசாணை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைச் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, அதன்படி கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சியின் கடைகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண கொள்கை வழிகாட்டுதல்களை உருவாக்க கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் "வழிகாட்டுதல் குழு" (Steering Committee) அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | தலைவர் |
| 2. | கூடுதல் ஆட்சியர் / இணை இயக்குநர் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. | உறுப்பினர் |
| 3. | செயற் பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. | உறுப்பினர் |
| 4. | செயற் பொறியாளர், பொது பணித்துறை (கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு). | உறுப்பினர் |
| 5. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | உறுப்பினர் |
| 6. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ( வளர்ச்சி) | ஒருங்கிணைப்பாளர் |
| 7. | மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | உறுப்பினர் |
| 8. | வணிகர் சங்க பிரதிநிதிகள் (இருவர்) (மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படுபவர்கள்) | உறுப்பினர்கள் |

மேற்காணும் வழிகாட்டுதல் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும். கீழ்குறிப்பிட்ட பணிகள் வழிகாட்டுதல் குழுவால் மேற்கொள்ளப்படும்:–

I. கிராம உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் சொத்துவரி உள்ளிட்ட வரி இனங்கள் மற்றும் அனைத்து வருவாய் ஈட்டக்கூடிய வரியில்லா இனங்கள் குறித்து விவாதித்து தேவைக்கு ஏற்ப வழிகாட்டுதல் நெறிமுறைகளை வகுத்து கிராம உள்ளாட்சிகளில் ஏற்றத்தாழ்வற்ற நியாயமான வருவாயினை ஈட்டுவதற்கு வழிவகை செய்தல்.

II. கிராம உள்ளாட்சிகளில் வருவாய் குறித்து ஏற்படும் முக்கியமான மற்றும் உள்ளூர் மட்டத்தில் தீர்க்க இயலாத பிரச்சனைகள் குறித்து ஆலோசித்து முடிவு செய்தல்.

III. கிராம உள்ளாட்சிகளுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கான குத்தகை இனங்களுக்கு நியாயமான வாடகை மற்றும் இடத்திற்கேற்ற முன் வைப்புத் தொகை நிர்ணயம் செய்ய உதவுதல்.

IV. கிராம உள்ளாட்சிகளுக்கு சொந்தமான வருவாய் ஈட்டும் சொத்துகளை ஏலம் (auction) விடுவது குறித்த வழிமுறைகள் வகுப்பது.

V. கிராம உள்ளாட்சிகளின் காலி நிலங்கள், கட்டிடங்கள் முதலானவற்றை முறையாக வருவாய் ஈட்டக்கூடிய விதத்தில் பயன்படுத்திட ஆலோசனை வழங்குதல்.

VI. குத்தகை/வாடகை தொகை மறு நிர்ணயம் செய்தலுக்கு கால இடைவெளி அளவை நிர்ணயம் செய்தல்.

VII. ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்டு வசூலிக்கப்பட்டு வரும் வாடகை வருவாயில் உள்ள குறைகளை சீரமைப்பதற்கும் நிலுவையில் உள்ள வழக்குகளை சட்ட ரீதியாக அணுகி முடிவுக்கு கொண்டு வரவும் உதவுதல்.

VIII. வருடாந்திர குத்தகை இனங்கள் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கான கட்டணங்கள் வாகன நிறுத்துமிடம் மற்றும் கழிவறை வசதிக்கான கட்டணங்கள் முதலானவற்றை மாற்றியமைத்தல் மற்றும் அதற்கான குத்தகை விதிகளை உருவாக்குதல் போன்றவற்றிற்கான ஆலோசனைகள் வழங்குதல்.

IX. வரியினங்கள் குறித்தான வழிகாட்டுதல் வழங்குதல்.

X. ஆவின், கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை போன்ற பொது நிறுவனங்களுக்காக வழங்கப்படும் நிலங்கள்/ கட்டிடங்களுக்கான வாடகை நிர்ணயம் செய்தல் குறித்தான வழிகாட்டுதல் வழங்குதல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை –15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை – 9.
பொதுப் பணித் துறை, சென்னை– 9.

நகல்:
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வ.செ.(ம)ஒ.) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்